# அல்லாஹ்வின் ரஸூல்மார்கள்

பாடம் 8

அல்லாஹ் உலகில் மனிதரைப் படைத்தான். அவர்களுக்கு நேர்வழியைக் காட்டுவதற்காக காலத்துக்குக் காலம் தூதர்களை அனுப்பினான். அவர்களையே நாம் நபிமார்கள் என்றும் ரஸூல்மார்கள் என்றும் அழைக்கின்றோம். அவர்கள் மக்களை நேர்வழியின்பால் அழைத்தனர். அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள். அவனைத் தவிர வணக்கத்துக் குரியவன் வேறு எவருமில்லை என்று அவர்கள் அனைவரும் போதனை செய்தார்கள்.

நபிமார்களில் விசேடமானவர்கள் ரஸூல்மார்கள் எனப்பட்டனர். ஆதம்(அலை) அவர்கள், முதல் மனிதரும் முதல் நபியுமாவார்கள். முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் இறுதி நபியும் இறுதி ரஸூலும் ஆவார்கள்.

எல்லா நபிமார்களும் ரஸூல்மார்களும் மனிதர்களே. அவர்கள் அனைவரும் மற்ற மனிதர்களைப் போன்றே உண்டு, உறங்கினார்கள். மணமுடித்துக் குடும்பமாக வாழ்ந்தார்கள். தொழில்களையும் செய்தார்கள். அவர்களிடம் நபிமார்களுக்கே உரிய சிறப்பான தன்மைகள் காணப்பட்டன. அவர்கள் தீர்க்கமான புத்தியும், விவேகமும் உள்ளவர்களாக இருந்தார்கள். அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட தூதை ஒளிவு மறைவின்றி மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள்.



6. S. P. C. 120284

அவர்கள் எப்போதும் உண்மையே பேசினார்கள். நம்பிக்கைக்குரியவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் நடந்து கொண்டார்கள். பாவங்கள் செய்வதில் இருந்தும் பாதுகாக்கப்பட்டிருந்தார்கள். இவ்வாறு நாம் நபிமார்களைப் பற்றியும், ரஸூல்மார்களைப் பற்றியும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

| |
|---|
| **அல்லாஹ்வின் தூதர்கள் நபிமார்கள். அவர்கள் மக்களுக்கு வழிகாட்டிகள்.** |

**பயிற்சி**

**பின்வரும் கூற்றுக்களை வாசித்து சரியாயின் "√" என்றும், பிழையாயின் "X" என்றும் அடைப்பினுள் அடையாளமிடுங்கள்.**

1. முஹம்மத்(ஸல்) அவர்கள் இறுதி நபி ஆவார்கள். ☐
2. நபிமார்கள் மனிதர்களல்லர். ☐
3. நபிமார்கள் எப்போதும் பாவங்கள் செய்வதிலிருந்து பாதுகாக்கப்பட்டிருந்தனர் ☐
4. நபிமார்கள் மணமுடித்தோ, தொழில் செய்தோ வாழவில்லை. ☐
5. நபிமார்கள் யாவரும் ஒரே இறைவனை வணங்கும்படி போதனை செய்தார்கள். ☐